# காப்பிய இலக்கியத் தகவல்கள்

- காப்பிய இலக்கணம் குறித்துக் கூறும் நூல் தண்டியலங்காரம்.
- காப்பியம் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரு வகைப்படும்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளையும் கூறுவது பெருங்காப்பியம் எனப்படும்.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறுகாப்பியம் எனப்படும்.

**ஐம்பெருங்காப்பியங்கள்**

- ஐம்பெருங்காப்பியங்கள் என்ற தொடரை முதன் முதலில் கூறியவர் மயிலைநாதர் (நன்னூல் 387) உரை.

| | |
|---|---|
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| மணிமேகலை | -சீத்தலைச் சாத்தனார் |
| சீவக சிந்தாமணி | - திருத்தக்க தேவர் |
| வளையாபதி | -பெயர் தெரியவில்லை |
| குண்டலகேசி | - நாதகுத்தனார் |

- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.
- சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி என்ற மூன்றும் சமணக் காப்பியங்கள்
- மணிமேகலை, குண்டலகேசி, என்ற இரண்டும் பௌத்த காப்பியங்கள்
- ஐஞ்சிறுகாப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்கள் ஆகும்.
- குண்டலகேசிக்கு எதிராகச் செய்யப்பட்டது நீலகேசி
- நீலகேசி ஐஞ்சிறு காப்பியத்துள் ஒன்று (காண்க ஐஞ்சிறு காப்பியங்கள்)

**1. சிலப்பதிகாரம்**

**நூற் குறிப்பு:**

- சிலம்பு + அதிகாரம் - சிலப்பதிகாரம்
- கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது. ஆதலின் சிலப்பதிகாரமாயிற்று.
- சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்க் காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் எனும் முப்பெருங்கண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது.
- புகார்க்காண்டம் பத்து காதைகளையும், மதுரைக் காண்டம் பதின்மூன்று காதைகளையும் வஞ்சிக் காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளது.
- இது உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் வழங்கப்பெறும்.
- முதற் காப்பியம், இரட்டைக் காப்பியம், முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் எனச் சிலப்பதிகாரத்தைப் போற்றி புகழ்வோர். ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம்
- சிலம்பு + அதிகாரம் - சிலப்பதிகாரம்
- ஆசிரிளர் இளங்கோவடிகள்
- காலம் 2 ஆம் நூற்றாண்டு
- இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மகன் ஓர் சமணத் துறவி. வணிக குலத்தைச் சேர்ந்த துறவி என்பாரும் உண்டு.
- இளங்கோவடிகள் துறவு பூண்டு அமர்ந்த இடம் குடவாயிற் கோட்டம் என்ற ஊர்.
- குடவாயிற் கோட்டம் சேர நாட்டு ஊர்
- மூன்று காண்டம் முப்பது காதை
- காதை – கதை பொதிந்துள்ள பாட்டு

- புகார் காண்டம்: மங்கல வாழ்த்துப் பாடல் முதல் நாடுகாண் காதை வரை உள்ள 10 காதைகள்
- மதுரைக் காண்டம்: காடுகாண் காதை முதல் கட்டுரைக் காதை வரை உள்ள 13 காதைகள்
- வஞ்சிக் காண்டம்: குன்றக் குரவை முதல் வரந்தருகாதை உள்ள 13 காதைகள்
- சிலப்பதிகாரம் ஆசிரியப் பாவாலும் கொச்சகக் கலிப்பாவாலும் ஆனது.

**ஆசிரியர் குறிப்பு:**

- இளங்கோவடிகள் சேர மரபினர்
- இளங்கோவடிகளின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோனை
- இவரது தமையன் சேரன் செங்குட்டுவன்
- இளையவரான இளங்கோவே நாடாள்வார் என்று கணியன் கூறிய கருத்தைப் பொய்ப்பிக்கும் பொருட்டு இளங்கோ இளமையிலேயே துறவு பூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.
- அரசியல் வேறுபாடு கருதாதவர், சமய வேறுபாடற்ற துறவி.
- இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

**சிலம்பின் புகழ்:**

“நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு” – பாரதியார்
“சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் … தமிழ்ச் சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன்” – பாரதியார்
“யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவனைப் போல் இளங்கோவனைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை” – பாரதியார்
“தமிழ் கூறும் நல் உலகம்” என்று மூன்று நாடுகளையும் ஒருங்கே காணும் தன்மை தொல்காப்பியத்தில் உண்டு. ஆனால் சங்க இலக்கியத்தில் இல்லை.
“முதன்முதலாகத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறியில் நின்று நூல் செய்தவர் இளங்கோவடிகள் - மு.வரதராசனார்.

- நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்புத் தந்து முதலில் பாடியவர் இளங்கோவடிகள்
- நாட்டுப்புறப் பாடல்களுக்குச் சிறப்புத் தந்து இணங்கோவடிகளை அடுத்துப் பாடியவர் மாணிக்கவாசகர்
- சைவ வைணவ நெறிகளையும் பாடிய சமணநூல் சிலப்பதிகாரம்
- முதல் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம்
- முதல் தேசியக் காப்பியம் சிலப்பதிகாரம்
- இரண்டாவது தமிழ் தேசிய காப்பியம் பெரிய புராணம்
- பாவின் வளர்ச்சிக்கு வித்திட்ட நூல் சிலப்பதிகாரம்
- சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை எழுதியவர் அடியார்க்கு நல்லார்.

**முக்கிய கதை மாந்தர்கள்:**

- தலைவன் கோவலன்
- தலைவி கண்ணகி (சங்க காலத்துக் கடையெழு வள்ளல்களில் ஒருவனான பேகனின் மனைவி பெயரும் கண்ணகி)
- ஆடல் மங்கை மாதவி
- கோவலன் தந்தை மாசாத்துவான்
- கண்ணகியின் தந்தை மாநாய்கன்
- மாதவியின் தாய் சித்திராபதி
- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை
- கண்ணகியின் தோழி தேவந்தி (இவள் ஓர் அந்தணப் பெண் இவள் கணவன் பாசண்ட சாத்தன்)

- மாதவியின் தோழி வயந்தமாலை
- பெண் சமணத்துறவி கவுந்தியடிகள்
- ஆண் பௌத்தத் துறவி அறவண அடிகள்
- மதுரையில் கண்ணகியை அடைக்கலம் பெற்ற ஆயர் குலப் பெண் மாதரி
- மாதரியின் மகள் ஐயை
- கோவலனை ஏமாற்றியவன் பொற்கொல்லன்
- மாதவியின் (பணிமகள் அல்லது வேலைக்காரன்) கோசிகாமணி (கௌசிகாமணி)
- கோவலனின் நண்பன் மாடலன்
- மதுரை செல்ல வழிகாட்டியவன் மாங்காட்டு மறையோன்
- கோசிகாமணி, மாடலன், மாங்காட்டு மறையோன் மூவரும் அந்தணர்கள்
- முாதவியின் முதல் கடிதத்தை எடுத்துச் சென்றவள் வயந்தமாலை
- முாதவியின் இரண்டாம் கடிதத்தைக் கோவலனிடம் சேர்த்தவன் கோசிகாமணி
- மதுரையின் காவல் தொய்வம் மதுராபதி
- கண்ணகிக்குக் கோயில் கட்டியவன் செங்குட்டுவன்
- செங்குட்டுவனின் மனைவி வேண்மாள்
- சிலை எடுத்தபோது உடன் இருந்தவர்கள் இலங்கை மன்னன் கயவாகு, (கஜபாகு) சோழமன்னன் பெருநற்கிள்ளி, கனகவியாசர்
- கண்ணகி கோயிலின் முதல் பூசாரி தேவந்தி
- முதல் பெண் பூசாரி தேவந்தி
- செங்குட்டுவனின் அமைச்சர்கள் அழும்பில்வேள், வில்லவன் கோதை
- வடநாட்டுப் போரில் செங்குட்டுவனுக்கு உதவியவர்கள் நூற்றுவர் கன்னர் (சதகர்ணிகள்)
- செங்குட்டுவன் போர் செய்த இடம் குயிலாலுவம்
- கண்ணகி சிலைக்குக் கல் எடுத்த மலை இமயமலை.

**செய்திகள்:**

- சிலம்பின் குறிக்கோள் மூன்று
- கோவலன் - மாதவி பிரிவுக்குக் காரணம் ஊழ்
- கோவலன் மதுரை சென்றதுக்குக் காரணம் ஊழ்
- கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் ஊழ்
- மதுரை எரிந்ததற்குக் காரணம் ஊழ் என்று இளங்கோவடிகள் கருதுகிறார்.
- இளங்கோவடிகளுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறியவர் சீத்தலைச் சாத்தனார்.
- கண்ணகியின் வரலாற்றைச் சீத்தலைச் சாத்தனார் எழுத வேண்டும் என்று சொன்னவர் இளங்கோவடிகள்
- கண்ணகியின் வரலாற்றை எழுதத் தகுதியுடையவர் இளங்கோவடிகளே என்று சொல்லி அவரே எழுத வேண்டும் என்று சொன்னவர் சீத்தலைச் சாத்தனார்.
- இளங்கோவடிகள் தம் நூலைச் சீத்தலைச் சாத்தனார் முன் அரங்கேற்றினார்.
- கூத்து, ஆடல், இசை, குழல், தண்ணுமை, யாழ், ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் இலக்கணமும், அரங்கின் இலக்கணமும், ஆடும் இயல்பும், பற்றிய செய்திகள் அரங்கேற்றுக் காதையில் இடம் பெற்றுள்ளன.
- தவறு செய்வோரைப் பூதம் புடைத்துண்ணும் இடம் பூத சதுக்கம் பூதத்தின் பெயர் சதுக்க பூதம்
- அரசன் தவறு செய்யினும் அமைச்சர்கள் நடுநிலை தவறினும் அவற்றை அறிவிக்கப் பாவை ஆடும் இடம் பாவை மன்றம்.
- மழை வேண்டி எடுக்கப்படும் விழா இந்திர விழா
- இந்திர விழா குறித்துச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறுகின்றன.
- மதுரையில் கோவலனைச் சந்தித்தவன் மாடல மறைவோன்
- கோவலனின் குலத்தெய்வத்தின் பெயர் மணிமேகலை
- கோவலன் தன் மகளுக்குத் தன் குலதெய்வத்தின் பெயரை வைத்தான்
- கடக்களிறு அடக்கிய கருணை மறவன் கோவலன்

- அந்தணப் பெண்ணுக்கு உதவி செய்து செல்லாச் செல்வனானவன் கோவலன்
- முதியோள் துன்பம் துடைக்கச் சதுக்கப் பூதத்திடம் உயிர் கொடுக்கத் துணிந்த இல்லோர் செம்மல் கோவலன்
- கூடல் மகளிர் ஆடல்கண்டு மனம் திரிந்தவன் பாண்டியன்
- ஆதனால் ஊடல் கொண்டு பிரிந்து சென்றவள் கோப்பெருந்தேவி
- ஊடல் நீக்கப் பாண்டியன் சென்றபோது இடையில் வந்து சந்தித்தவன் பொற்கொல்லன்
- பூம்புகாரில் வாழ்ந்த ஏழு கற்புடை மகளிர் பற்றிக் கண்ணகி வஞ்சினமாலை என்ற காதையில் கூறுகிறாள்.
- மதுரை எரிந்த நாள்: ஆடி மாதம் கிரு‘ண பட்சம், எட்டாம் நாள், கார்த்திகையும் பரணியும் சேர்ந்திருந்த வெள்ளிக்கிழமை
- கண்ணகியின் காற்சிலம்பில் இருந்தது மாணிக்கப்பரல்
- கோப்பெருந்தேவியின் காற்சிலம்பில் இருந்தது முத்துப்பரல்
- வரி என்பதற்குப் பாடல் என்று பொருள்
- பாலை நில மக்களின் பாட்டு வேட்டுவ வரி ஆகும்.
  நெய்தல் நிலமக்களின் பாட்டு கானல்வரி ஆகும்.
  பந்தடிக்கும்போது பாடும் பாட்டு கந்துவரி ஆகும்.
  ஊஞ்சலாட்டத்தின் போது பாடும்பாட்டு ஊசல் வரி
  கழங்காட்டத்தின்போது பாடும் பாட்டு அம்மானைவரி
- குரவை என்பது 7,8,9 பேர் கைகோத்து ஆடம் கூத்து
- முல்லை நில மக்களின் கூத்து ஆசிரியர் குரவை ஆகும்.
  குறிஞ்சி நில மக்களின் கூத்து குன்றக் குரவை ஆகும்.
- துணங்கை என்பது ஆணும் பெண்ணும் தம் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு முன்னும் பின்னும் சாய்ந்து ஆடும் ஆட்டம்.
- அம்மானை வரியில் புகழப்படுபவன் சோழன் கந்துக வரியில் புகழப்படுபவன் பாண்டியன் ஊசல்வரியில் புகழப்படுபவன் சேரன்.
- வள்ளைப் பாட்டு என்பது உலக்கைப்பாட்டு
- தூங்கெயில் மூன்று எறிந்தவன், கறவைக்கு முறை செய்தவர், இமயத்தில் புலி பொறித்தவன் - சோழன்.
- இந்திரனின் ஆரம் அணிந்தவன் - பாண்டியன்
- கடம்பு எறிந்தவன், பாரதப் போரில் பெருஞ்சோறு அளித்தவன், யவனரை வென்றவன் - சேரன்
- வணிகர்களுக்குக் கொடுக்கும் பட்டம் காவிதி, எட்டி
- வீரர்களுக்கு கொடுக்கும் பட்டம் ஏனாதி
- பிறவாயாக்கைப் பெரியோன் - சிவன்
- ஊரின் நடுவில் உள்ள சிவன் கோயில் ஊர்க்கோட்டம் ஊர்ப்புறத்தில் உள்ள மாசாத்தன் கோயில் புறம்பணையான் கோட்டம்
  முருகன் இருக்கம் மயில் வேற்கோட்டம்
  அருகன் கோயில் நிக்கந்தக் கோட்டம்
  கற்பக மரம் இருக்கும் கோயில்
  அமரர்தருக் கோட்டம்
- கொடுகொட்டி, கொட்டி சேதம் - இரண்டும் ஆடல் வகை
- முப்புரம் எரிந்த சிவன் ஆடிய ஆட்டம் கொடுகொட்டி சிவன் - பார்வதி (பைரவி) வடிவில் ஆடிய ஆட்டம் பாண்டரங்கம்
  கம்சன் அனுப்பிய யானையைக் கொல்ல கண்ணன் ஆடியது அல்லியத் தொகுதி
  வாணாசுரனை அழிக்க கண்ணன் ஆடியது மல்லின் ஆடல்
  சூரணை வென்ற முருகன் ஆடியது துடி ஆடல்
  முருகன் குடையை முன்னே சாய்த்து ஆடியது குடை ஆடல்.
- வாணாசுரணின் சோ நகரில் கண்ணன் ஆடியது குடக்கூத்து (கரகாட்டம்) காமன் ஆடியது பேடி ஆடல் மாயவள் (துர்க்கை) ஆடியது மரக்கால் ஆட்டம் (பொய்க்கால்)
  திருமகள் ஆடியது பாவையாடல்
  அயிராணி வயலில் நின்று ஆடியது கடையம்

- குழல் என்பது துளைக்கருவி (அ) ஊது கருவி யாழ் என்பது நரம்புக் கருவி அல்லது மீட்டுக் கருவி முழவு, தண்ணுமை, மத்தளம் என்பன தோற்கருவி (அ) அடிகருவி
- காமன் மகன் அநிருத்தன்
- இந்திரன் மகன் சயந்தன்
- சயந்தன் காதலி ஊர்வசி
- சயந்தன் உலகில் தலைக்கோலாகப் பிறந்தான். ஊர்வசி உலகில் மாதவி என்ற பெயரில் பிறந்தாள். அந்த மாதவி வழிவந்தவன் தான் கேவலனின் மாதவி

**மேற்கோள்:**

"ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்"
"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்"
"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்"
- இம்மூன்றும் குறிக்கோள்

"கவவுக்கை நெகிழாமல் தீது அறுக எனவாழ்த்தி"
"மலையிடை பிறவாமணியே என்கோ"
- கோவலன் கூற்று

"நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்"
- மாதவி

"மாலை வாரார் ஆயினும் காலைகாண்குதும்"
- மாதவி

"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்"
- இடாகினிப்பேய்

"சலம் புணர் கொள்கை சலதியோடு ஆடி குலந்தரு
வான்பொருள் குன்றம் தொலைத்த இலம்போடு
நாணுந் தரும்" – கோவலன்

"முள்ளுடைக்காட்டில் முதுநரி ஆகு" – கவுந்தியடிகள்

"இம்மை செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தி" - மாடலமறையோன்

"இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்"
- கவுந்தியடிகள்

"திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே"
"கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே"
"நாராயணா என்னா நாவென்ன நாவே"
- என்று சமய ஒருமை பாடியவர் இளங்கோவடிகள்

"பத்தினிக்கடவுளைப் பரசல் வேண்டும்"
- வேண்மாள்

"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம்" – கண்ணகி

"மன்பதை காக்கும் நற்குடி பிறத்தல்
துன்பம் அல்லது தொழு தகவு இல்"
- செங்குட்டுவன்

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினன் நான் அவன்தன் மகள்"
- கடவுட் கண்ணகி

"பசியும் பினியும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"
- இவ்வடிகள் சிலப்பதிகாரம் மணிமேகலை இரண்டிலும் வருகிறது.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
பாலை என்பதோர் படிமம் கொள்ளும்"
- மாங்காட்டு மறையோன்

- **சிலப்பதிகாரம்:**

**மதுரைக்காண்டம் - வழக்குரை காதை:**

வாழியெம் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்.

பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்

செற்றனன் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என
வருக மற்றவள் தருக ஈங்கென

வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
• வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்

கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரேயெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்என ஒள்ளிழை

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் விலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்

கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்

மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

- இளங்கோவடிகள்

**2. மணிமேகலை**

- ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
- வேறுபெயர் தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழ்ப் புலவன்
- காலம் 2 ஆம் நூற்றாண்டு
- இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்ற பெயரும் உண்டு
- பௌத்த காப்பியம்
- தமிழன் இரண்டாம் காப்பிய நூல்
- சமய பூசலுக்கு வித்திட்ட நூல்
- துறவுக்கு முதன்மை கொடுக்கும் நூல்
- கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்ற பெண்ணின் வரலாற்றைக் கூறும் நூல்
- பெண்ணின் பெருமை பேசும் நூல் (சிலப்பதிகாரம் போன்று)
- சங்க இலக்கியம் இல்லறத்திற்கு முதன்மை கொடுத்தது திருக்குறள் இல்லறம் துறவறம் இரண்டுக்கும் முதன்மை கொடுத்தது மணிமேகலை துறவுக்கு முதன்மை கொடுத்தது.

**நூல் அமைப்பு:**

- காண்டப் பிரிவுகள் இல்லை
- 30 காதைகள் உள்ளன
- முதல் காதை விழாவறைக் காதை

- இறுதிக் காதை பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை
- முழுவதும் ஆசிரியப் பாவால் ஆனது.
- 27-வது சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை மட்டும் இணைக் குறள் ஆசிரியப்பாவாலானது மற்றவை நிலை மண்டில ஆசிரியப்பாக்கள்

## மணிமேகலை:

### ஆசிரியர் குறிப்பு:

- மணிமேகலையின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
- சாத்தன் என்பது இவரது இயற்பெயர்
- இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தார்
- கூலவாணிகம் (கூலம் - தானியம்) செய்தவர்.
- இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பெற்றார்.
- இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவார்.
- இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்.
- தண்டமிழ் ஆசான் சாத்தன் தன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாராகப் பாராட்டியுள்ளார்.
- இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

### நூற்குறிப்பு:

- மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன.
- எனவே இவை இரட்டைக் காப்பியங்கள் என வழங்கப்பெறும்.
- மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால் இந்நூலுக்கு மணிமேகலையைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு.
- இந்நூல் சொற்சுவையுமம் பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது. பௌத்த மதச் சார்புடையது.
- முப்பது காதைகளைக் கொண்டது
- முப்பது காதைகளுள் ஆபுத்திரன் நாடு அடைந்த காதை இருபத்து நான்காவது காதை.

### கதை மாந்தர்:

- மணிமேகலையின் தோழி சுதமதி கண்ணகியின் தோழி தேவந்தி
- மாருத வேகனால் கைவிடப்பட்டவள் சுதமதி
- புத்தத்துறவி அறவண அடிகள்
- ஆதிரையின் கணவன் சாதுவன்
- மணிமேகலைக்கு முதன்முதலாக அமுதசுரபியில் பிச்சையிட்டவள் ஆதிரை
- ஆதிரையின் வரலாற்றை மணிமேகலைக்குச் சொன்னவள் காய சண்டிகை
- வித்யாதர மங்கை காய சண்டிகை (காஞ்சினபுரம்)
- விருச்சிக முனிவரால் பசிநோய் சாபம் பெற்றவள் காய சண்டிகை
- காய சண்டிகையின் பசிநோயைப் போக்கியவள் மணிமேகலை
- மணிமேகலையை மணிபல்லவத்தீவுக்கு அழைத்துச் சென்ற தெய்வம் மணிமேகலாத் தெய்வம்
- மணிமேகலாத் தெய்வம் மணிமேகலைக்குக் கொடுத்த வரம் மூன்று
- ஆபுத்திரனுக்கு அமுதசுரபியைக் கொடுத்தது சிந்தாதேவி
- அமுதசுரபியைக் கோமுகியில் இட்டவன் ஆபுத்திரன்
- அமுத சுரபி பற்றி மணிமேகலைக்குச் சொன்னது தீவதிலகை

**இடங்கள்:**

- ❖ மணிமேகலை பிறந்த ஊர் பூம்புகார்
- ❖ மணிமேகலை மறைந்த ஊர் காஞ்சிபுரம்
- ❖ மணிமேகலை சமயவாதிகளிடம் உண்மை கேட்ட ஊர் வஞ்சி மாநகரம்
- ❖ பூம்புகாரில் உள்ள சோலைகள் : இலவந்திகை, உய்யாவனம், உவவனம், கவேரவனம், சம்பாதிவனம்
- ❖ மணிமேகலை பூக்கொய்யச் சென்ற வனம் உவவனம்
- ❖ மணிபல்லவத்தில் இருந்த பீடிகை புத்தபீடிகை
- ❖ அமுத சுரபி இருந்த இடம் கோமுகி
- ❖ அமுத சுரபிக்கு வேறு பெயர் அட்சய பாத்திரம்
- ❖ சக்கரவாளக் கோட்டம் என்பது சுடுகாடு
- ❖ உலக அறவி என்பது தருமசாலை

**செய்திகள்:**

- ❖ சம்புத் தீவின் தெய்வம் சம்பு
- ❖ சம்புத் தீவிற்கு நாவலந்தீவு என்ற வேறுபெயரும் உண்டு
- ❖ நாவலந்தீவு என்பது இந்தியா
- ❖ சம்பாபதி புகார் நகரத்திற்குக் காவிரி பூம்பட்டினம் என்று பெயர் அளித்தது.
- ❖ முதன்முதலில் இந்திரவிழா எடுத்தவன் தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன்
- ❖ இந்திரவிழா 28 நாட்கள் நடைபெறும்.
- ❖ மழை வேண்டி எடுக்கப்படும் விழா இந்திரா விழா
- ❖ பூம்புகாரில் இந்திரவிழா மிகச் சிறப்பாக நடந்ததாக சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற இரண்டு நூல்களும் கூறுகின்றன.
- ❖ மூவகைப் பத்தினிப் பெண்டிர்
  1. உடன் எரி மூழ்குவர்
  2. தனிஎரி மூழ்குவர்
  3. கைம்மை நோன்பு நோற்பார்
- ❖ உடல் அடக்க முறை ஐந்து
  1. சுடுதல்
  2. வாளா இடுதல்
  3. தோண்டிப்புதைத்தல்
  4. பள்ளத்தில் அடைத்தல்
  5. தாழியில் கவிழ்தல்

**தீயவை பத்து:**

| | | |
|---|---|---|
| 1. கொலை | 2. களவு | 3. காமம் |
| 4. பொய் | 5. குறளை | 6. கடுமொழி |
| 7. பயனில் சொல் | 8. வெ.ஃகல் | 9. வெகுளல் |
| 10. பொல்லாக்காட்சி | | |

- ❖ சுடலை நோன்பிகள் என்போர் காபாலியர்கள்
- ❖ விரதயாக்கையர் என்போர் விரதமிருப்போர்
- ❖ பௌத்த சமயத்தில் மதிப்புமிக்க எண் 7
- ❖ தேவேந்திரன் இருக்கை மீது விரிக்கப்பட்டிருக்கும் வெள்ளைக் கம்பளம் பாண்டு கம்பளம் எனப்படும்.

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவளம் குன்றும்
மாரிவளம் குன்றின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதி இன்றாகும்".

- மணிமேகலா தெய்வம் உதயகுமாரனுக்கு அவன் கனவில் சொன்னது

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
புடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும் ....
பசிப்பிணி என்னும் பாவி"

- பசியின் கொடுமையை தீவதிலகை மணிமேகலைக்குச் சொன்னது.

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலைபகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்தினி ஞாலத்து வாழ்க்கைக் கெல்லாம்
உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

- தீவதிலகை மணிமே்கலைக்குச் சொன்னது
- 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

என்று முதன் முதலில் கூறியவர் குடபுலவியனார் - புறநானூறு – 18

"பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்கைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுஎன உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்.

- மணிமேகலை உதய குமரனுக்குச் சொன்னது

"அறம் எனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உளையுளும் அல்லது
கண்டதில்"

- மணிமேகலை புண்ணிய அரசனுக்கு (ஆபுத்திரன்) கூறியது

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பொருள் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறவே விழுத்துணை ஆவது"

- விசாகை தருமதத்தனுக்குக் கூறியது.

**3. சீவக சிந்தாமணி:**

- ஆசிரியர் திருத்தக்க தேவர்
- காலம் 9 ஆம் நூற்றாண்டு. கருத்து வேறுபாடு உண்டு.
- திருத்தக்க தேவர் நிலையாமை குறித்து எழுதிய நூல் நரிவிருத்தம்
- விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்
- சமணக் காப்பியம்
- மணநூல், காமநூல், முக்தி நூல் என்ற வேறு பெயர்களும் உண்டு.
- வட மொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, சத்திர சூளாமணி என்ற இரு நூலையும் தழுவி எழுதப்பட்டது சீவக சிந்தாமணி
- காண்டப் பிரிவு இல்லை
- 13 இலம்பகங்களையும் 3145 பாடல்களையும் கொண்டது.
- முதல் இலம்பகம் நாமகள் இலம்பகம்
- இறுதி இலம்பகம் முக்தி இலம்பகம்
- காப்பியத் தலைவன் சீவகன்
- சீவகன் சிந்தாமணியுடன் ஒப்பிடப்பட்டுள்ளான்.
- சிந்தாமணி என்பது கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்தில் உள்ள ஒரு மணி (ரத்தினம்)
- சீவகன் கல்வி கற்றதைக் கூறுவது நாமகள் இலம்பகம்
- சீவகன் நாட்டைக் கைப்பற்றியதைக் கூறுவது மண்மகள் இலம்பகம்
- சீவகன் ஆட்சி செய்ததைக் கூறுவது பூமகள் இலம்பகம் சீவகன் வீடுபேறு அடைந்ததைக் கூறுவது முக்தி இலம்பகம்
- பதுமனுக்கு கோவிந்தையைத் திருமணம் முடித்தது கோவிந்தையார் இலம்பகம்
- பதுமுகன் சீவகனின் நண்பன்
- காந்தர்வதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களைச் சீவகன் மணந்தான்.
- சீவகன் வீணைப் போட்டியில் வென்று முதலில் காந்தர்வத்தையை மணந்தான்.
- குணமாலையைச் சுண்ணப்பொடி தேர்வில் மணந்தான்
- பதுமையாரை விடம் மீட்டு மணந்தான்
- கனக மாலையைத் தடமிந்தன் பண்டம் விற்கச் செய்து மணந்தான்.
- விமலையைக் காகதத்தன் பண்டம் விற்கச் செய்து மணந்தான்
- சுரமஞ்சரியை முதுமைக்கோலம் காட்டி மணந்தான்.
- நூல் ஆசிரியரே சீவகனுக்குக் 'காமதிலகம்' எனப் பட்டம் சூட்டியுள்ளார்.
- சீவகனின் பெற்றோர் சச்சந்தன் - விசயை
- நாடு ஏமாங்கத நாடு
- தலைநகரம் இராசமாபுரம்
- அமைச்சன் கட்டியங்காரன்
- சீவகனின் தந்தையான சச்சந்தனைக் கொன்றவன் கட்டியங்காரன்
- சீவகன் பிறந்த இடம் சுடுகாடு

- சீவகனை எடுத்து வளர்த்தவன் கந்துக்கடன் என்னும் வணிகன்
- சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் அச்சணந்தி
- திருத்தக்கதேவர் சோழர்குலத்தில் பிறந்தவர் இவர்.
- இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்
- இவர் பாடிய மற்றொரு நூல் நரி விருத்தம் ஆகும்.

**நூல் குறிப்பு:**

- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி
- இந்நூலின் கதைத் தலைவன் சீவகன்
- அவன் பெயரை இணைதத்துச் சீவகசிந்தாமணி எனப் பெயர் பெற்றது என்பர்.
- இந்நூலுக்கு மணநூல் என்னும் வேறு பெயரும் உண்டு.

**சிறப்பு:**

- அனைத்துச் சமயத்தவரும் விரும்பிக்கற்ற சமணக் காப்பியம்
- சைவனான குலோத்துங்க மன்னன் விரும்பிக்கற்ற காப்பியம்
- நூல் முழுமைக்கும் சைவரான நச்சினார்க்கினியர் உரை எழுதினார்.
- இவர் இருமுறை உரை எழுதினார் என்பர்
- சைவரான உ.வே.சா. அவர்கள் முதன் முதலில் பதிப்பித்தார்.
- அவர் பதிப்பித்த முதல் நாலும் சீவகசிந்தாமணியே ஆகும்.
- கிறித்துவரான ஜி.யு.போப் இதனை இலியட், ஒடிசியுடன் ஒப்பிட்டுள்ளார்.

**மேற்கோள்:**

"இவ்வாறாகப் பிறப்பதுவோ
இதுவோ மன்னர்க்கு இயல் வேந்தே"

"மெய்வகை தெரிதல் ஞானம்
விளங்கிய பொருள்கள் தம்மை
பொய்வகை இன்றித்தேறல் காட்சி
ஐம்பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத்தேயாது
ஒழுகுதல் ஒழுக்கம், மூன்றும்
இவ்வகை நிறைந்த போழ்தே
இருவினையும் கழியும் என்றான்"
"சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்...
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"
"காய்மாண்ட தெங்கின் பழம் வீழ....
ஏமாங்கதம் என்று இசையால் திசைபோயதுண்டே"

**4. வளையாபதி:**

- ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- சமணக் காப்பியம்
- விருத்தப்பாவால் ஆனது
- முழுமையாகக் கிடைக்கவில்லை
- கிடைத்தவை 72 பாக்கள்
- மூல நூல் வைசிக புராணம் 35 வது சுருக்கம்
- நவகோடி நாராயணன் பற்றிய நூல்
- மடலேறுதல் பற்றிக் கூறும் காப்பிய நூல்
- ஒட்டக் கூத்தர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைத்தார் என்று தக்கயாகப் பரணியின் உரையாசிரியர் கூறுகிறார்.

**மேற்கோள்:**

"பொறையிலா அறிவு, போகப்புணர்வு
 இலா இளமை, மேவல்
துறையிலா வனசவாவி, துகில் இலாக்
 கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி இலாப்
 புலமை, நன்னர்ச்
சிறைஇலா நகரம் போலும் சேய்இலாச்
 செல்வம் அன்றே"

**சிறப்பு:**

❖ இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல்

**5. குண்டலகேசி:**

❖ ஆசிரியர் நாதகுத்தனார்
❖ காலம் 7 ஆம் நூற்றாண்டு
❖ பௌத்த காப்பியம்
❖ சுருண்ட தலைமுடியை உடையவள் என்று பொருள்
❖ குண்டலகேசி விருத்தம், அகல கவி என்ற வேறு பெயர்களும் உண்டு.
❖ நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை
❖ கிடைத்தவை 224 பாடல்கள்
❖ குண்டல கேசியின் வரலாற்றை நீலகேசி கூறுகிறது
❖ குண்டல கேசியின் இயற்பெயர் பத்திரை
❖ இராசகிருக நாட்டு மந்திரியின் மகள்
❖ குண்டலகேசியின் கணவன் காளன் இவன் ஒரு கள்வன்
❖ குண்டலகேசி சாரிபுத்தரிடம் தோற்றுப் புத்தமதம் தழுவினாள்
❖ கலைஞரால் 'மந்திரி குமாரி' என்று திரைப்படமாக்கப்பட்டது.

**மேற்கோள்:**

"பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ் இயல்பும் இன்னே
மேல்வரும் மூப்பும் ஆகி
நாளும் நாள் சாகின்றோமால்
நமக்கு நாம் அழாதது என்னோ"

**5(அ). ஐஞ்சிறு காப்பியங்கள்:**

❖ ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமணக் காப்பியங்களே
❖ அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறுகாப்பியம் என்று இதன் இலக்கணத்தைத் தண்டியலங்காரம் கூறுகிறது.
❖ ஐஞ்சிறு காப்பியம் என்ற வழக்கினை ஏற்படுத்தியவர் ச.வை.தாமோதரம் பிள்ளை ஆவார்.
❖ நாக குமார காவியம் - ஆசிரியர் தெரியவில்லை (கந்தியார்)
❖ உதயண குமார காவியம் - ஆசிரியர் தெரியவில்லை (கந்தியார்)
❖ யசோதர காவியம் - வெண்ணாவலூர் உடையார் வேள் நீலகேசி – ஆசிரியர் தெரியவில்லை
❖ சமண சமயத்துப் பெண் துறவியின் பொதுப்பெயர் கந்தியார்
❖ கந்தியைக் கவுந்தி என்றும் கூறுவர்.
❖ அவ்வை, பைம்மை, ஐயை, குரத்தி, ஆர்யாங்கனை எனவும் சமணப் பெண் துறவிகள் அழைக்கப்பட்டனர்.

**1. நாககுமார காவியம்:**

❖ ஆசிரியர் பெயர் தெரியவில்லை, கந்தயார் ஒருவர் எழுதினார் என்பர்.
❖ நாகபஞ்சமி நோன்பின் சிறப்பைக் கூறும் நூல்
❖ இந்நூலுக்கு நாகபஞ்சமி கதை என்ற வேறுபெயரும் உண்டு
❖ சருக்கம் 5, பாடல்கள் 170
❖ இராசகிரியில் உள்ள விபுலி மலையில் வீற்றிருக்கும் வர்த்தமான மகாவீரரை வணங்குவதற்குச் சிரேணிக மாமன்னனும் அவன் தேவியாகிய சாலினியும் சென்றனர். அக்கோயிலில் இருந்த தவ முனிவராகிய

கௌதமர் அவர்களுக்கு நாககுமாரனது கதையை எடுத்துரைக்கிறார்.
- ❖ மணத்தையும் போகத்தையும் மிகுதியகாகக் கூறும் சமண நூல்

**மேற்கோள்:**

"அறனின்றிப் பின்னை ஒன்றுமுயிர்க்கு அரணில்லை என்றும்
மறமின்றி உயிர்க்கு இடர்செய் மற்றொன்றும் இல்லைஎன்றும்
திறமிகு உணர்ந்து தேறித் தீக்கதிப் பிறவிக்கு அஞ்சி
மறம் இதை விட்டு அறத்தில் வாழுமின் உலகத்தீரே"

**2. உதயணகுமார காவியம்:**

- ❖ ஆசிரியர் பெயர் தெரியவில்லை, கந்தியார் என்பர்.
- ❖ மூலநூல் பெருங்கதை
- ❖ காண்டங்கள் 6, விருத்தப்பாக்கள் 369
- ❖ 1. உஞ்சைக் காண்டம் 2. இலாவண காண்டம் 3. மகதகாண்டகம் 4. வத்தவ காண்டம் 5. நரவாகன காண்டம் 6. துறவுக் காண்டம்
- ❖ பெருங்கதையின் முதற்பகுதியும் இறுதிப் பகுதியும் கிடைக்கவில்லை. முழுக் கதையையும் அறிய இந்நூல் துணைபுரிகிறது.
- ❖ உதயணன் குலம் குருகுலம்
- ❖ பெற்றோர் சதானிகன், மிருகாபதி
- ❖ நாடு வத்தவ நாடு
- ❖ தலை நகரம் கோசாம்பி
- ❖ சூரிய உதயத்தில் பிறந்ததால் உதயணன் எனப்பட்டான்.
- ❖ உதயணனுக்கு 'விச்சை வீரன்' என்ற வேறு பெயரும் உண்டு
- ❖ விச்சை வீரன் என்றால் பலகலை வல்லவன் என்று பொருள்
- ❖ உதயணனைச் சிறைப்படுத்தியவன் உச்சியினி மன்னன் பிரச் சோதனன்
- ❖ உதயணன் யாழின் பெயர் கோடபதி
- ❖ இவன் அமைச்சன் பெயர் யூகி (நண்பனும் ஆவான்)
- ❖ உதயணனுக்கு நான்கு மனைவியர் முதல் மனைவி வாசவதத்தை. இவள் பிரச்சோதனை மகள், யாழிசையால் இவளை மணந்தான்

இரண்டாம் மனைவி பதுமாதவி. இவள் மகத நாட்டுப் பெண்
மூன்றாம் மனைவி மானனீகை, பந்தாட்டத்தில் காதல்
கொண்டு இவளை மணந்தான்
நான்காம் மனைவி விரிசிகை. இவள் முனிவரின் மகள்

**மேற்கோள்:**

"வீணை நற்கிழத்தி நீ, வித்தக உருவி நீ நாணின் பாவை தானும் நீ, நலந்திகழ்மணியும் நீ காண என்றன் முன்பாய்க் காரிகையே வந்து, நீ தோணி முகம் காட்டு எனச் சொல்லியே புலம்புவான்".

**3. யசோதர காவியம்:**

- ❖ ஆசிரியர் வெண்ணாவலூர் உடையார்வேள்
- ❖ சருக்கம் 5, பாடல்கள் 320
- ❖ வடமொழியில் எழுதப்பட்ட உத்திர புராணத்திலிருந்து இதன் கதை எடுக்கப்பட்டது என்றும், புட்பதத்தர் எழுதிய யசோதர சரிதத்தின் தழுவல் என்றும் கூறுவர்.
- ❖ உயிர்க்கொலை தீது என்று உணர்த்தும் நூல்
- ❖ ஔதேய நாட்டு மன்னன் மாரிதத்தன். இவன் மாரிதேவிக்கு உயிர்ப்பலி கொடுக்க முயன்றான். உயிர்ப்பலியாக அபயருசி, அவன் தங்கை அபயமதி இருவரும் இருந்தனர். அபயருசி சிரித்துக் கொண்டே உயிர்க் கொலையின்

விளைவை மாரிதத்தனுக்கு எடுத்துரைப்பதே இவ்வாறு அவள் எடுத்துரைக்கின்றாள் யசோதரனின் கதை ஆகும்.

- ❖ மன்னன் அசோகனின் மகன் யசோதரன். இவன் அமிர்தமதியை மணக்கின்றான். அமிர்தமதி யானைப்பாகன் பாடிய இசைப் பாடல் கேட்டு மயங்கி அவனோடு கள்ள உறவு கொண்டு தன் கணவனையும் மாமியாரையும் நஞ்சூட்டிக் கொல்கிறாள். பின் பலபிறவி எடுத்து அனைவரும் துன்பப்படுகின்றனர்.
- ❖ நல்ஞானம், நற்காட்சி நல்ஒழுக்கம் இம்மூன்றும் மும்மணிகள்
- ❖ ஏழுவகை நரகங்கள் கூறப்படுகின்றன அவை.

1. இருளில் இருள் 2. இருள்
3. புகை 4. சேறு 5. மணல்
6. பரல் 7. மருள்

**மேற்கோள் :**

"யான்உயிர் வாழ்தல் எண்ணி எளியவர்
 தம்மைக்கொல்லின்
வான்உயர் இன்பமே அல்லால் வருநெறி
 தரியும் அன்றி
ஊன்உயிர் இன்பம் எண்ணி எண்ணாமல்
 மற்றொன்றும் இன்றி
மானுடர்வாழ்வு மண்ணில் மரித்திடும்
 இயல்பிற்று அன்றோ"

**4. நீலகேசி:**

- ❖ நீலகேசி என்றால் கருத்த கூந்தலை உடையவள் என்று பொருள்
- ❖ ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- ❖ சருக்கம் 10 (பதிகவுரைச் சருக்கம் நீங்கலாக)
- ❖ பாடல்கள் 894
- ❖ நீலகேசித் தெருட்டு என்ற வேறு பெயரும் உண்டு
- ❖ சமண முனிவர் முனிச் சந்திரனை நீலி என்ற பெண் அச்சுறுத்தி மயக்க முயல்கிறாள். மயங்காத முனிவர் அறிவுரை கூற, அவள் திருந்தி சமணமதத்தை ஏற்றுப் பிற சமய வாதிகளை வெற்றி கொள்கிறாள்.
- ❖ சமணம் அல்லாத பிற இந்திய சமயங்கின் கோட்பாடுகளைத் தருக்க முறையில் மறுத்துரைக்கும் நூல்
- ❖ குண்டலகேசி என்ற நூலுக்கு எதிராக எழுதப்பட்ட நூல் நீலகேசி
- ❖ உரையாசிரியர் சமய திவாகர வாமன முனிவர். இவ்வுரைக்குச் சமய திவாகர விருத்தி என்ற பெயரும் உண்டு

**மேற்கோள்:**

"கோறல் பொய்த்தல் கொடுங்களவு
 நீங்கிப் பிறர் மனைகண்மேல்
சேறல் இன்றிச் செழும் பொருள்மேல்
 சென்ற சிந்தை வேட்கையினை
ஆறு கிற்பின் அமர் உலகம்
 நுன்கண் கடியதாம் என்றான்
நீறும் ஓடும் நிழல் மணியும்
 பொன்னும் நிகரா நோக்குவான்"

**5. சூளாமணி:**

- ❖ ஆசிரியர் தோலா மொழித்தேவர். இயற்பெயர் வர்த்தமான தேவர்
- ❖ சருக்கம் 12, விருத்தப்பாக்கள் 2330
- ❖ காப்பியத் தலைவன் உலகின் முடிக்கோர் சூளாமணி ஆயினான் என்பதால் சூளாமணி என்று பெயர் பெற்றது. (பலமுறை வருதல்)
- ❖ முதல் நூல் வட மொழியில் உள்ள ஆருகத மாபுராணம்
- ❖ இதன் கதை ஸ்ரீ புராணத்திலும் உள்ளது.
- ❖ சுரமை நாட்டு மன்னன் பயாபதி
- ❖ பயாபதியின் மக்கள் மூவர்.

1. திவிட்ட நம்பி (கண்ணன் அவதாரம்)
2. விசய நம்பி (பலராமன் அவதாரம்)
3. மகள் சோதிமாலை

- ❖ பயாபதியே பெரும்பாலும் திவிட்டனைப் பற்றியே கூறுகிறது.
- ❖ சூளாமணியின் கதாநாயகன் திவிட்டன்
- ❖ திவிட்டன் அச்சுவக் கண்டனுடன் போரிட்டு வென்றான்.
- ❖ திவிட்டன் விண்ணுலக மங்கையான சுயம்பிரபையை மணந்தான்
- ❖ தன்னைக் கொல்லவந்த மாய சிங்கத்தை வென்றான்.
- ❖ போருக்குக் காரணம் பொறாமை என்கிறது இந்நூல்
- ❖ பெருங்காப்பிய இலக்கணம் அனைத்தும் கொண்ட நூலாக இருந்தும் சிறு காப்பியத்துள் இடம் பெற்றுள்ளது.
- ❖ சூளாமணியை முதல் முதலாகப் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை
- ❖ பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என்று பெருமை சிறுமைகளைக் கற்பனை செய்ததற்குக் காரணங்கள் இல்லை என்பார் மு.வரதராசனார்.
- ❖ திருத்தக்கதேவர், தோலாமொழித் தேவர் ஆகிய இருவரைப் பற்றியும் மைசூர் மாநிலத்தில் உள்ள சிரவண பெலகோலாக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.
- ❖ சிரவண பெலகோலா - ‘சமண வெள்ளைக்குளம்’

**மேற்கோள்:**

“ஆனை துரப்ப அரவு உறை ஆழ்குழி
நானவிர் பற்றுபு நாலும் ஒருவன் ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுடர் இன்பம் மதித்தனை கொள் நீ”

**சிறப்பு:**

விருத்தப் பாவைக் கையாள்வதில் இவர் சீவக சிந்தாமணி ஆசிரியரைப் பின்பற்றிய போதிலும் சில இடங்களில் அவரையும் மிஞ்சிவிட்டார் என்று கூறலாம் என்பார் மு.வ.

**பெருங்காதை:**

- ❖ ஆசிரியர் கொங்குவேள்
- ❖ உதயணன் வரலாற்றை முதலில் தமிழில் கூறிய நூல்
- ❖ சமணக் காப்பியம்
- ❖ இதற்குக் ‘கொங்குவேள் மாக்கதை” என்ற பெயரும் உண்டு
- ❖ நூல் முழுவதும் கிடைக்கவில்லை
- ❖ கிடைத்தவை 5 காண்டங்கள், 99 காதைகள் ஆசிரியப்பாவில் ஆனது
- ❖ முதற் பகுதியும் இறுதிப் பகுதியும் கிடைக்கவில்லை. (பதிற்றுப்பத்துப் போல)
- ❖ முழுக் கதையையும் அறிய உதயணகுமார காவியம் உதவி செய்கிறது.
- ❖ கதைக் களஞ்சியம் என்று போற்றப்படும் நூல் பெருங்கதை
- ❖ வடமொழியில் உள்ள பிருகத் கதா மஞ்சரி, கதா சரித் சாகரம் ஆகியன இதன் முதல் நூல்கள்
- ❖ பிருகத்கதா என்ற பைசாச மொழிநூலை ஒட்டி இயற்றப்பட்டது என்றும் கூறுவர்.

**மேற்கோள்:**

“இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தருகணும் வரம்பில் கல்வியும்
தேசத்து அமைதியும் மாசில் சூழ்ச்சியொடு
பெண்வகை நின்ற நின் நன்மகற்கு அல்லது
மகட்கொடை நேரார் மதியோர்”.

**✸ விவேக சிந்தாமணி**

**நூல் குறிப்பு**

- ✓ விவேக சிந்தாமணி என்னும் இந்நூல், புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு,

இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை.

**வாழ்த்து – தாயுமானவர்**

**ஆசிரியர் குறிப்பு**

- பெயர் - தாயுமானவர்
- பெற்றோர் - கேடிலியப்பர் - கெசவல்லி அம்மையார்
- ஊர் - நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு (வேதாரண்யம்)
- முனைவி – மட்டுவார் குழலி
- நூல் - தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
- பணி – திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலர்
- காலம் - கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு

**நூல் குறிப்பு**

- வாழ்த்தாக இடம் பெற்றுள்ள பாடல், தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்னும் நூலில் பராபரக் கண்ணி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.
- இந்நூல் தெய்வத் தமிழின் இனிமையும், எளிமையும் பொருந்திய செய்யுள் நடையால் மனத்தூய்மை, பக்திச்சுவை ஆகியவற்றை ஊட்டும்.
- திருச்சிராப்பள்ளி மலைமீது எழுந்தருளியுள்ள இறைவன் தாயுமானவர் திருவருளால் பிறந்தமையால் இவருக்கு தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது.
- தாயுமானவர் நினைவு இல்லம் இராமநாதபுரம் மாவட்டத்து இலட்சுமிபுரத்தில் உள்ளது.

எங்களது Facebook பக்கம்

English – Examsdaily        தமிழ் – Examsdaily Tamil

எங்களது WhatsAPP Group - Click Here